www.tamilarangam.net

# எழுச்சிகர மேதின ஊர்வலம்

# மே 1 1996

## ஒடுக்குமுறைக்கும் அடக்குமுறைக்கும் எதிரான உறுதிப்பாட்டை பறைசாற்றும் புரட்சிகரமான எழுச்சிமிகு நாளை எதிர்கொண்டு நிற்கின்றோம்

இந்த நாளில் புலம் பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்களாகிய நாம், எங்கள் தேசம் எதிர்கொண்டு நிற்கும் சிங்கள மேலாதிக்க அடக்குமுறையையும், ஒடுக்குமுறையையும், உலகத் தொழிலாள நேசசக்தியிடம் எடுத்தியம்பும் வரலாற்றுக் கடமையையும் சுமந்து நிற்கின்றோம்.

பௌத்த சிங்கள அடக்குமுறை இயந்திரம், எமது மண்ணில் தனது நாசக்கரங்களை பதித்து நிற்கின்றது. பல இலட்சக்கணக்கான தமிழ்மக்கள் சொந்த இடங்களை விட்டு விரட்டியடிக்கப்பட்டுள்ளனர். தமிழர்களின் நிலம் பறிக்கப்பட்டுள்ளது. தொழிற்கூடங்கள் அழிக்கப்பட்டுள்ளன. விவசாயம் செய்வதும், மீன் பிடிப்பதும், பிற தொழில்கள் செய்வதும் முடியாததாகிப் போய்விட்டது.

உயிர் வாழ்தல் கேள்விக்குறியாக்கப்பட்டுள்ள, தொழில் செய்யும் உரிமை மறுக்கப்பட்டுள்ள ஒரு தேசிய இனத்தின் பிரதிநிதிகள் என்ற வகையில், புலம்பெயர்ந்து வாழும் நாம், உலகத்தொழிலாளர்களின் உரிமைக்கான எழுச்சி நாளில் எமது தேசத்தின் நிலையை சர்வதேசத்தின் முன்னால் எடுத்தியம்புவோம்.

எங்கள் சுதந்திர பூமியில் நின்று கொண்டு உலகத் தொழிலாளவர்க்கத்தின் ஒருமைப்பாட்டுக்கு உறுதியான கைகொடுக்கும் அந்த நாளை அவாவி நிற்பதை வெளிப்படுத்துவோம்.

அடக்குமுறை ஒடுக்குமுறைத் தளைகள் அகன்ற சுதந்திரத்தின் சுகானுபவத்தைச் சுகிக்கத்துடிக்கும் எம் தேசிய ஆன்மாவின் தாகத்தை வெளிப்படுத்துவோம்.

**நேரம்: பிற்பகல் 2.00 மணி**

**ஒன்றுகூடும் இடம்: Place de la Gare du Nord**

**ஊர்வலப் பாதை: Gare du Nord → Republique → Bastille**

மேலதிக தொடர்புகட்கு: தமிழர் ஒருங்கிணைப்புக் குழு – பிரான்ஸ் – 43 58 11 42

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்